DEPOSITION OF WITNESS 5
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 323/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : திரு.சொரிமுத்து |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 20th February 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜராகி தெரிவிக்கும் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவுசெய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்று செங்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 20.11.2015 ம் தேதி நான் அய்யாபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்றைய தினம் மகேந்திரவாடியை சேர்ந்த மாரியம்மாள் என்பவர் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில்இருந்ததாக போன் மூலம் கிடைத்த தகவலின்பேரில் காவலர் ராஜேந்திரன் என்பவர் நேரில் சென்று மாரியம்மாளை விசாரித்து சம்பவம் பற்றி புகார் வாக்குமூலம் பதிவுசெய்து 12.00 மணிக்குநிலையம் வந்து அந்த புகார் வாக்குமூலத்தை தலைமைக்காவலர் மருதப்பாண்டியனிடம் கொடுத்தார். மருதப்பாண்டியன் அந்த புகார்

வாக்குமூலத்தை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையக்குற்ற எண்.14/2015 ச/பி.294(பி), 324, 506(1) இதச ன் கீழ் வழக்கு பதிவுசெய்தார். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆகவும், அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** அந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசலை நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சங்கரன்கோவிலுக்கு அனுப்பிவைத்தார். அந்த முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை என் பார்வைக்கு வைத்தார். அதை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 20.11.2015 ம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் சாட்சிகள் முத்தையா, சரவணன் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வைமகஜர் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம். அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. மலையப்பதேவர், மலையப்பதேவர் மகன் முருகன் ஆகியோர்களை மகேந்திரவாடியில்வைத்து விசாரித்தேன். அதன்பிறகு சாட்சிகள் முத்தையா மற்றும்சரவணன் ஆகியோர்களையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு இவ்வழக்கில் காயம்பட்ட மாரியம்மாளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன்பிறகு நிலையம் வந்து புகார்வாக்குமூலம் பதிவு செய்த ராஜேந்திரன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக்காவலர் மருதப்பாண்டியன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 03.01.2016 ம் தேதி வழக்கின் எதிரியான தேவேந்திரனை மகேந்திரவாடி சொசைட்டி அருகில் வைத்து மாலை 6 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து விசாரித்தேன். எதிரி தேவேந்திரனுக்கு கண்பார்வை சரியில்லாமல் சிகிச்சை பெற்ற விபரம் அறிந்து அவரை நிலையப்பிணையில் விடுவித்தேன். 03.01.2016 ம் தேதியன்று காயம்பட்ட மாரியம்மாளின் மகனாகிய குருசாமியை விசாரித்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்பு 07.06.2017 ம் தேதி திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் உதவிமருத்துவராக பணிபுரிந்த கிரண் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்து காயச்சான்றிதழ் பெற்றேன். அத்துடன் வழக்கு விசாரணை முடித்து அன்றையதினமே எதிரி மீது 07.06.2017 ம் தேதி குற்ற இறுதி அறிக்கையை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் முதல் விசாரணையில் கூறியவாறு புகார் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், பட்டியல் சாட்சிகள் விசாரிக்கவில்லை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறியவாறு மருத்துவர் விசாரிக்கப்பட்டு அவரிடமிருந்து காயச்சான்றிதழ் பெறவில்லை என்றாலும், எதிரி நான் கூறியவாறு கைது செய்யவில்லை என்றாலும், எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**